செய்தி வெளியீடு எண்:363 நாள் : 19.07.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.7.2016 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை சார்பில் இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், சுற்றுலாத் துறை சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூரில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதி, இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 9 கோடியே 44 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிலைகள் பாதுகாப்பு மையம், அன்னதானக் கூடங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், சேவார்த்திகள் ஓய்வுக் கூடங்கள், வணிக வளாகம், உள்விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துதல், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாத்தல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருவதால், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம், ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் 13,175 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் இரண்டு தளங்களில், 21 அறைகளுடன் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதியை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர் அருள்மிகு அபிராமி உடனுறை அமிர்தகடேசுவரர் திருக்கோயில் அருகில் 3560 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்தில், 10 அறைகளுடன் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதி;

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிலைகள் பாதுகாப்பு மையம்;

மதுரை மாவட்டம் – சதுரகிரி அருள்மிகு சுந்தர மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருவாரூர் மாவட்டம் – ஸ்ரீவாஞ்சியம் அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான திருவாலங்காடு அருள்மிகு வாடாரண்யேஸ்வரர் திருக்கோயில், கடலூர் மாவட்டம் – சிங்கிரிகுடி அருள்மிகு லட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயில், புதுப்பாளையம் அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில் மற்றும் சென்னை – திருவட்டீஸ்வரன்பேட்டை அருள்மிகு திருவட்டீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் 1 கோடியே 95 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 அன்னதானக் கூடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – பூண்டி அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம் – புட்லூர் அருள்மிகு பூங்காவனத்தம்மன் என்கிற அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், மதுரை மாவட்டம் – சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருவானைக்காவல் அருள்மிகு ஜெம்புகேஸ்வரர் திருக்கோயில் ஆகிய இடங்களில் 2 கோடியே 51 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வரவேற்பு மையம், பக்தர்கள் தங்கும் விடுதிகள் மற்றும் சேவார்த்திகள் ஓய்வுக்கூடங்கள்;

அரியலூர் மாவட்டம் – கல்லங்குறிச்சி கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – திருவானைக்காவல் அருள்மிகு ஜெம்புகேஸ்வரர் திருக்கோயில், மதுரை மாவட்டம் – சதுரகிரி அருள்மிகு சுந்தர மகாலிங்கசுவாமி திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம் – விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் சேலம் மாவட்டம் – ஜாகீர் அம்மாப்பாளையம் அருள்மிகு வெண்ணங்குடி முனியப்பசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில் 96 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கழிவறைகள் மற்றும் குளியலறைகள்;

திருநெல்வேலி மாவட்டம் – குற்றாலம், பராசக்தி மகளிர் கலைக் கல்லூரியில் 98 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், சேலம் மாவட்டம் – சேலம் நகர் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில் மற்றும் மேச்சேரி அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் ஆகிய இடங்களில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொருட்கள் வைப்பறை, மிதியடி பாதுகாப்பு அறை, வணிக வளாகம் மற்றும் தேர் பாதுகாப்புக் கொட்டகை;

அரியலூர் மாவட்டம் – கல்லங்குறிச்சி கலியுக வரதராஜப் பெருமாள் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 58 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், ஆய்வுக்கூடம் மற்றும் அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 12 கோடியே 64 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந. நடராஜன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம

மோகன ராவ், இ.ஆ.ப, தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் (கூடுதல் பொறுப்பு) திரு. டி.கே. இராமச்சந்திரன், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலைத் துறை ஆணையர் முனைவர் மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப., (ஓய்வு), மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 19.7.2016**